1971 டிசம்பர் 16]

செயங்கொண்டத்தில் முந்திரிப்பருப்புத் தொழிற்சாலை.

*473 **வினா—திரு. அ. சின்னசாமி**: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயங்கொண்டத்தில் முந்திரிப்பருப்பு தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : நம்முடைய மாவட்டத்தில் முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டதிலும் பல இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி ஜெயங் கொண்டத்தைப் பற்றியது. உறுப்பினர் கன்னியாகுமரிக்குப் போகிறார். எப்போது திரும்பி வரப் போகிறார்கள்?

திரு. ஜே. ஜேம்ஸ் : அந்தத் தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக் கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிற் சாலைகளுக்குத் தேவையான முந்திரிக் கொட்டை கிடைப்பதில்லை என்று அதை நடத்துகிறவர்கள் கூறுகிறார்கள். இந்த அரசு மத்திய அரசாங்கத்தை அணுகி தேவையான முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்து கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முந்திரித் தொழிற் சாலைக்குத் தேவையான முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று கேட்டால் போதும். இதற்கு ஏன் கன்னியாகுமரியைப்பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. செ. சதாசிவம்: உடையார்பாளையம், ஜெயங்கொண்டம் பகுதிகளில் தனியார் உடையது அரசாங்கத்தின் உடையதுமான முந்திரிச் சாகுபடி நிலங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அங்குள்ள மக்களுக்குத் தொழில் வசதி இல்லாத காரணத்தாலும் அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டியும் முந்திரிப் பருப்பு தொழிற் சாலை ஒன்றை அந்தப் பகுதியில் நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முந்திரியைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் ஏராளமாக உற்பத்தியாகிறது. அந்தப் பகுதியில் தனியார் முன்வருவார்களேயானால் சிறு தொழில் வாரியத்தின் மூலமாகக் கடன் கொடுக்கப்படும். ஏற்கனவே, இந்தத் தொழிலுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[1971 டிசம்பர் 16

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த முந்திரியிலிருந்து பிளாஸ்டிக் உற்பத்தி செய்வதாகச் சொன்னார்களே, அந்தத் திட்டம் எப்படி இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யாரேனும் அப்படிப்பட்ட திட்டத்தை ஏற்று நடத்த முன்வந்தால் அரசாங்கம் அதை நிறைவேற்றும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டை நம்முடைய நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது இப்போது குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முந்திரி ஏற்றுமதியைப் பற்றிய விவரங்கள் இல்லை.

வாடகைக்குத் தொளையிடும் இயந்திரங்கள்

* 474 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கூட்டுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை விவசாய இலாகாவில் போரிங் மிஷின் வாடகைக்கு விடும் திட்டத்தின் மூலம் கடந்த 1965, 1966 ஆகிய இரண்டு ஆண்டுகளில் தனித்தனியே வசூலிக்கப்பட்ட வாடகை எவ்வளவு?

(இ) இந்த வருடங்களில் வாடகை பாக்கி ஏதேனும் உண்டா?

(உ) ஆம் எனில், யார் யாரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) 1965-ல் வசூலிக்கப்பட்ட வாடகை ரூ. 8,266.15, 1966-ல் வசூலிக்கப்பட்ட வாடகை ரூ. 12,782.99.

(இ) இல்லை.

(உ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

Oil Tanker Berth in Madras Harbour

* 475 *Q.*—THIRU U. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an Oil Tanker Berth in Madras Harbour in Madras City ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சபைமுன் அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதைப் பார்க்குமாறு மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

@ 216—218-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.